# அறிவிப்பு பலகையில் சீன எழுத்துகள் நீக்கப்படும் என்ற கூற்றில் உண்மையில்லை

கோலாலம்பூர், பிப். 26-
ஜாலான் பெட்டாலிங் என்ற அறிவிப்பு பலகையில் உள்ள சீன எழுத்துகளை நீக்கும் ஆலோசனையை கோலாலம்பூர் மாநகர் மன்றம் கொண்டுள்ளது என்ற பத்திரிகை செய்தியில் உண்மை இல்லை.

இவ்விவகாரம் குறித்து மாநகர் மன்றம் தக்க விளக்கம் தந்துள்ளது. ஜாலான் பெட்டாலிங் அங்காடி வியாபாரிகளின் மையப்பகுதியில் வைக்கப்பட்டுள்ள அறிவிப்பு பலகையானது




விதிக்கப்பட்ட வழிகாட்டி வழிமுறைகளையும் கொண்ட கொள்கை கோட்பாட்டையும் கடைப்பிடித்துள்ளது.

எனவே இதுநாள் வரையில் சம்பந்தப்பட்ட அறிவிப்பு பலகையின் சீன எழுத்துகளை மாற்றவோ அல்லது நீக்கவோ எந்தவொரு திட்டத்தையோ கோலாலம்பூர் மாநகர் மன்றம் கொண்டிருக்கவில்லை.

1982ஆம் ஆண்டு கூட்டரசுப் பிரதேச விளம்பர உப சட்டங்களை கருத்தில் கொண்டு விளம்பர பலகை சம்பந்தமாக ஒவ்வொரு முடிவும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் விளக்கம் தர விரும்புகிறது.

அதே வேளையில் உள்ளூர் சமூகத்தின் பாரம்பரிய பண்புகள், கலாச்சார அம்சங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சமூகத்தின் தேவைகளும் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

எனவே அறிவிப்பு பலகை சம்பந்தப்பட்ட விஷயத்தில் எந்தவொரு மாற்றமும் கவனமான வழிமுறையில் மேற்கொள்ளப்படும்.

எனவே பொது மக்கள் எந்தவோர் அடிப்படையற்ற குற்றச்சாட்டை நம்பி தவறான முடிவுக்கு வந்துவிடக் கூடாது என்று மாநகர் மன்றம் அறிவுறுத்த விரும்புகிறது. தக்க தகவலை பெற்றுக் கொள்வதற்கு மக்கள் மாநகர் மன்றத்தின் உதவியினை நாடலாம்.

அனைத்து அம்சங்களை உள்ளடக்கிய மற்றும் அனைத்து இனங்களின் பாரம்பரிய பண்புகளையும் கலாச்சாரங்களும் மதிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் கடமை கடப்பாட்டினை கோலாலம்பூர் மாநகர் மன்றம் தொடர்ந்து கொண்டிருக்கும்.